வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.088/அ1/2022 நாள். -01-2022

பொருள் : தேர்தல் – மாநகராட்சி / பேரூராட்சி / நகராட்சி தேர்தல் 2022– பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாதோர் பணியாளர்களுக்கான தேர்தல் வகுப்பு– ஆணை வழங்கப்பட்டமை – சார்பு

பார்வை : வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களின் நேரடி அறிவுரை

----

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களின் ஆணைக்கிணங்க கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் 31–01–2022, 09–02–2022 மற்றும் 18–02–2022 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ள தேர்தல் வகுப்பிற்கு தேர்தல் ஆணை பெற்ற அனைத்து ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் வகுப்பின் போதும் தேர்தல் பணியின் போதும் எவ்வித புகாருக்கு இடமளிக்காவண்ணம் சிறப்பாக செயல்படுமாறு அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்தல் வகுப்பு ஆணை பெற்ற அனைவரையும் உரிய நேரத்தில் பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேர்தல் ஆணை பெற்று தேர்தல் வகுப்பிற்கு செல்லாத சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மீது தேர்தல் விதிமுறைகளின்படியும், துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தேர்தல் வகுப்பு நடைபெறும் நாளில் உரிய நேரத்தில் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி முடியும் வரை பயிற்சி வகுப்பில் இருக்க வேண்டும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் வகுப்பு நடைபெறும் இடம் விவரம்

| வ. எண் | தேர்தல் வகுப்பு நடைபெறும் இடம் | மேற்பார்வையாளர் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 01 | டி கே எம் மகளிர் கலைக் கல்லூரி, வேலூர் | வட்டாரக் கல்வி அலுவலர்கள் வேலூர் நகர் / வேலூர் புறநகர் / கணியம்பாடி / அணைக்கட்டு / காட்பாடி | |
| 02 | திருவள்ளுவர் மேல்நிலைப்பள்ளி, குடியாத்தம் | வட்டாரக் கல்வி அலுவலர்கள் குடியாத்தம் / பேர்ணாம்பட்டு / கே.வி.குப்பம் | |

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெறும் தேர்தல் பயிற்சி வகுப்பினை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வட்டாரக் கல்வி அலுவலர்கள் மேற்பார்வையிட்டு தேர்தல் வகுப்பிற்கு அனைத்து ஆசிரியர்களும் கலந்துக்கொண்டார்களா என்பதை உறுதி செய்துக்கொள்ள வேண்டும் என்றும் பயிற்சி வகுப்பிற்கு வருகை புரியாதா ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்களை அன்று மாலை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் "அ1" பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம் ) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள்

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,வேலூர். தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.